මගේ අංකය
**எனது இல** DSD/HO/05/MF/08/01-එක...........
My No

ඔබේ අංකය
**உமது இல** ............................................
Your No

දිනය
**திகதி** 2024.07.22
............................................
Date

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை இலக்கம் - 2024/05**

**அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் வங்கிச் சங்க நிறைவேற்று குழுத் தலைவர்கள்,**
**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.**

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் சுயசக்தி கடன் திட்டத்தை செயற்படுத்தல்.**
**கட்டாய சேமிப்பு வைப்பு மீதியினை பிணையாக வைத்து சுயசக்தி கடன் தொகையினை வழங்கல்.**

**01. அறிமுகம்:**

சமுர்த்தி வங்கிகளினால் அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோர், திரியமாதா மற்றும் நிலையான வைப்பு கணக்குகளில் உள்ள மீதியினை பிணையாக வைத்து (வைப்புகளுக்கு எதிரான கடன்) கடன் தொகையினை வழங்குவதற்கு சுயசக்தி கடன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சமுர்த்தி நலனுதவி வேலைத் திட்டம் நிறுத்தப்பட்டதை தொடர்ந்து கட்டாய சேமிப்பு வைப்பு கணக்கில் காணப்படும் பணத்தினை மீளப் பெறுவதற்கு பெருந்தொகையான வாடிக்கையாளர் முன் வருகின்றனர்.

ஆனால் கட்டாய சேமிப்பு வைப்புத் தொகையினை மீள வழங்குவதற்கு சமுர்த்தி வங்கிகளில் திரவத் தன்மை பிரச்சினைகள் ஏற்படுவதுடன், கணக்குரிமையாளர்கள் சிரமங்களுக்கு உட்படுவதையும் தவிர்த்துக் கொள்ளும் முகமாக கட்டாய சேமிப்பு வைப்புத் தொகையினை பிணையாக வைத்து சுயசக்தி கடன் தொகையினை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கடன் வழங்கும் விதம் தொடர்பாக சமுர்த்தி வங்கிப் பணிக் குழுவினருக்கு தெளிவூட்டு முகமாகவே ,ச்சுற்றறிக்கை ஆலோசனை வெளியிடப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.



| | අධ්‍යක්ෂ ජනරාල් பணிப்பாளர் தலைமையதிபதி Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී பிரதான கணக்காளர் Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) பணிப்பாளர் (குறு நிதி ) Director ( Micro Finance) | කාර්යාලය அலுவலகம் Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

## 02. கடன் வழங்கப்படும் விடயதானங்கள் மற்றும் உயர்ந்தபட்ச கடன் தொகை

2.1

| கடன் வழங்கப்படும் விடயம் | உயர்ந்தபட்ச கடன் தொகை (ரூ) |
|---|---|
| சுயதொழில்/ விவசாய பயிர்ச் செய்கைகளுக்கு | வைப்புத் தொகையில் 90% வரை |
| பிள்ளைகளின் உயர்/ தொழில்சார் கல்விகளுக்கு (உள்நாட்டு/ வெளிநாட்டு) | வைப்புத் தொகையில் 90% வரை, உயர்ந்த பட்ச கடன் தொகை ரூ. 100,000/= ஆகும். |
| நுகர்வு / இடர்களுக்கு | உயர்ந்த பட்ச கடன்தொகை ரூ. 50,000/= ஆகும் |

மேற்குறிப்பிட்ட விடயதானங்களுக்கு கடன் தொகையினை வழங்கும் போது, கடன் தொகையினை கோரும் திகதியில் காணப்படும் வைப்பு மீதியில் 90% தை, அல்லது உயர்ந்தபட்ச கடன் தொகைக்குரிய குறைந்தபட்ச சேமிப்பு மீதி மதிப்பீட்டின் அடிப்படையில் கடன் தொகை தீர்மானிக்கப்படல் வேண்டும்.

2.2 சுயதொழில்/விவசாயம் போன்ற வருமானம் ஈட்டும் கருத்திட்டங்களின் பொருட்டு கடன்னை வழங்கும் போது கடன் தொகையினை பயன்படுத்த உள்ள விதம் மற்றும் எதிர்பார்க்கப்படும் வருமானம் தொடர்பான கருத்திட்ட அறிக்கை ஒன்றினை பெற்று கடன் தொகையினை விடுவித்தல் வேண்டும். இதற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடன் பெறுபவருக்கு ஒத்துழைப்புக்களை வழங்குதல் வேண்டும். கடன் தொகையினை பயன்படுத்தி கணக்கு வைத்திருப்பவர், வாழ்க்கை துணை, திருமணமாகாத பிள்ளைகள் ஆகியோர் கருத்திட்டத்தினை செயல்படுத்தி செல்ல முடியும்.

2.3 கணக்கினைப் பேணும் முதலாம் நபரின் குடும்பத்தில் உள்ள திருமணமாகாத பிள்ளைகளின் உயர்கல்வி/தொழிற் பயிற்சிகளின் பொருட்டு ஏற்படும் செலவுகளான பாடநெறிக் கட்டணம், கணினி உபகரணங்களை கொள்ளளவு செய்தல், உட்பட ஏனைய செலவுகளுக்கும் இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் தொகையினை விடுவிக்க முடியும்.

2.4. நுகர்வு / இடர் போன்ற காரணங்களுக்கு கடன் தொகையினை விடுவிக்கும் போது கட்டாய சேமிப்புக் கணக்கினை பேணிவரும் முதலாவது கணக்கு உடையோரின் தேவைகளுக்கு மாத்திரமே கடனை விடுவிக்க முடியும்.

2.5 கடனாளி ஒருவர் பெற்றுக்கொண்ட கடன் தொகையினை ஒப்பந்தத்திற்கு அமைய செலுத்தி முடித்ததன் பின்னர் புதிய கடன் தொகையினை கோருவதற்கு இடம் அளிக்கப்படுகிறது.

## 03. வருடாந்த வட்டி வீதம் (%) மற்றும் மீளச் செலுத்தும் காலங்கள் (மாதங்கள்).

3.1 வருடாந்த வட்டி வீதம், கட்டாய சேமிப்பு வைப்புக் கணக்கிற்கு வழங்கப்படும் வருடாந்த வட்டி வீதத்துடன் 2% தை சேர்த்து பெற்றுக் கொள்ளும் பெறுமதியாகும். (குறைந்து செல்லும் மீதி முறைமையில்).

3.2 மீளச் செலுத்தும் காலம்.

| தொகை (ரூ.) | மீளச் செலுத்தும் காலம் (மாதம்) |
|---|---|
| 10,000 அல்லது அதற்கு குறைவு எனின் | 12 |
| 10,001 – 25,000 | 24 |
| 25,001 - 50,000 | 36 |
| 50,001 அல்லது அதற்கு மேல் | 48 |

3.3 மீளச் செலுத்துவதற்கான உயர்ந்த பட்ச கால எல்லை வழங்கப்பட்டிருந்தாலும் கடனாளியின் விருப்பத்திற்கு அமைய உயர்ந்த பட்ச கால எல்லையை விட குறைந்த காலத்தினுள் கடன் தொகையினை மீளச் செலுத்தி முடிப்பதற்கும் இடம் அளிக்கப்படுகிறது.

3.4 தேவையான ஒரு சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகையினையும் மற்றும் அத்தினத்தில் செலுத்த வேண்டிய வட்டித் தொகைனையும் ஒரே தடவையில் முழுமையாக செலுத்தி கடன் தொகையிலிருந்து விடுபட்டுக் கொள்ள முடியும்.

3.5 சமுர்த்தி வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் கடன் தொகை ஒன்றினை பெற்று மீளச் செலுத்திக்கொண்டிருக்கும் கடனாளி ஒருவரும் இக்கடன் தொகையினை கோர முடியும். தற்போது அறவிடமுடியாக் கடன்/ காலங்கடந்த கடன் தொகைகள் காணப்படுகின்ற கடனாளிகளுக்கு இக்கடன் திட்டத்தின் கீழ் கடன்களை விடுவிக்க முடியாது.

3.6 ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருப ஆலோசனைகளுக்கு அமைய கட்டாய சேமிப்பு வைப்பு பணத்தினை மீளப்பெற கோரும் போது, அவர் இக்கடன் வேலை திட்டத்தின் கீழ் கடனை பெற்றிருப்பின் அக்கடன் தொகையினை மீளச் செலுத்தி முடிக்கும் வரை அச்சேமிப்பு பணத்தினை வழங்காமல் வைத்திருத்தல் கட்டாயமாகும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடனாளியினால் கடன் தொகையினை மீளச் செலுத்துவதற்கு முடியாத நிலைமை காணப்படுமாயின் தற்போது காணப்படும் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கு மேலதிகமாக, செலுத்த வேண்டிய கடன் தொகையில் 20% தினையும் சேர்த்து கணக்கில் தேக்கி வைத்துக் கொண்டு மீதி தொகையினை விடுவிக்க முடியும்.

**உ+ம் :** செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை ரூ. 90,000/= எனின் ரூ. 108,000/= தொகையினை கட்டாய சேமிப்பு கணக்கில் தேக்கி வைக்க வேண்டியது கட்டாயமாகும்.

## 04. **பிணைப் பாதுகாப்பு**

4.1 கட்டாய சேமிப்புக் கணக்கில் உள்ள மீதி.
4.2 கடன் தொகையினை செலுத்தி முடிக்கும் வரை வைப்புக் கணக்கில் உள்ள தொகையினை HOLD செய்து வைத்தல்.

## 05. கடன்கோரி விண்ணப்பித்தல் மற்றும் பயன்படுத்தப்படும் ஆவணங்கள்.

5.1 கடன் தொகையினை கோரி விண்ணப்பித்தல்.

i. கணக்கினை பேணி வரும் முதல் நபரினால் கடன் தொகைக்கான கோரிக்கை முன்வைக்கப்படல் வேண்டும்.
ii. இணைந்த கணக்குடைய நபரும் கடன் விண்ணப்ப படிவத்தில் ஒப்பிடுவதற்கு சம்மதம் தெரிவித்தல் வேண்டும்.
iii. இணைந்து கணக்குடைய நபர் சம்மதம் தெரிவிக்கவில்லை எனின் கடன் தொகையினை விடுவிக்க கூடாது.
iv. கட்டாய சேமிப்பு கணக்கு மீதியினை வேறு ஒரு கடனுக்கு பிணையாக வைத்திருப்பின், அல்லது கட்டாய சேமிப்பு கணக்கின் உரிமையாளராக இருந்து வேறு ஒரு கடன் தொகைக்கு பிணையாளியாக ஒப்பமிட்டிருந்து அக்கடன் தொகை செலுத்த தவறிய கடனாக இருக்குமாயின் இக்கடன் தொகையினை விடுவிக்க முடியாது.

5.2. கடனுக்கு விண்ணப்பிப்பதற்கு இதன் இணைப்பு - 01 கடன் விண்ணப்ப படிவத்தினையும், மற்றும் கடன் ஒப்பந்தத்தையும் பயன்படுத்துதல் வேண்டும்.

**06. கடனை அனுமதித்தல், விடுவித்தல் மற்றும் அறவீடு செய்தல்.**

6.1 கடனுக்கான அனுமதியினை வங்கியின் கட்டுப்பாட்டுச் சபையே வழங்க வேண்டும் என்பதுடன், தழுவல் அனுமதியின் கீழ் வங்கி முகாமையாளரினால் கடனை விடுவிக்கவும் முடியும்.

6.2 கடன் தொகையினை விடுவித்தல்.

பெற்றுக் கொள்ளவேண்டிய கடன் கணக்கு - சுயசக்தி - பற்று

அங்கத்தவர் / திரியமாதா / அங்கத்தவர் அல்லாதோர் வைப்பு கணக்கு - வரவு.

கட்டாய சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் முதல் நபரின் அல்லது இணைந்த கணக்குடையோரின் பெயரில் உள்ள மேற்குறித்த கணக்கிற்கு கடன் தொகையினை மாற்றம் செய்தல் வேண்டும். இணைந்த கடனாளியின் சேமிப்பு கணக்கிற்கு கடன் தொகையினை மாற்றம் செய்ய வேண்டுமாயின் முதலாவது கணக்குரிமையாளரின் சம்மதத்தை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**6.3 கடனை அறவீடு செய்தல்**

அங்கத்தவர் / திரியமாதா / அங்கத்தவர் அல்லாதோர் வைப்பு கணக்கு - பற்று

பெற்ற வட்டி - கொடுத்த கடன் கணக்கு - வரவு

பெற்றுக்கொள்ள வேண்டிய கடன் கணக்கு - சுயசக்தி - வரவு.

6.4 கணனி மென்பொருளின் ஊடாக கடன் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது வழங்கப்பட்டுள்ள செய்முறைகளை பயன்படுத்தி தகவல்களையும்.'. விவரங்களையும் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

6.5 தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் கடன் தவணைகளையும் மற்றும் வட்டித் தொகையையும் செலுத்த தவறும் பட்சத்தில் கட்டாயமாக அவரது வைப்புத் தொகையில் இருந்து செலுத்த வேண்டிய கடன் தொகையினை ஈடுசெய்துகொள்ள வேண்டும்.

**07. கூட்டு மற்றும் கடன் காப்பீட்டு திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்ய வேண்டியதில்லை.**

**08. ஏனைய விடயங்கள்.**

8.1 வருமானமீட்டும் செயற்பாடுகளுக்கு கடன் தொகையினை கோரும் போது தற்போது செயற்படுத்தப்படும் அல்லது புதிதாக ஆரம்பிக்கும் கருத்திட்டமாக இருத்தல் வேண்டும். அதேபோல் பயனுறுதி மிக்க கருத்திட்டமாக இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

8.2 வயதான மற்றும் நோய் வாய்பட்ட கட்டாய சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள் தனது வைப்புத் தொகையினை மீளக்கோரும் சந்தர்ப்பத்தில் அதற்கு பதிலாக கடனை பெற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தலாகாது.

**09. இது தொடர்பாக தேவைப்படும் மேலதிக ஆலோசனைகளுக்கு சுயசக்தி கடன் திட்டத்திற்கு வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருப ஆலோசனைகளும் செயற்பாட்டில் இருக்கும்.**

**சி.டி. களுஆராச்சி**
பணிப்பாளர் நாயகம்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**பிரதிகள்:**

1. செயலாளர் , மகளிர், சிறுவர் அலுவலக மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
3. பிரதான உள்ளக கணக்காய்வாளர், சமு.அபி.திணைக்களம்- உ.ந.பொ.
4. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், - உ.ந.பொ
5. பிரதேச செயலாளர் பிரதேச செயலகம் - உ.ந.பொ
6. மாவட்ட பிரதி / உதவி பணிப்பாளர்கள் - உ.ந.பொ.
7. தலைவர் உட்பட பணிப்பாளர் சபையினர் ,சமுர்த்தி வங்கிச் சமாசம் - தகவலுக்காக.

Translated by:
I . Aliyar
District Director (R)

**<u>சுயசக்தி கடன் திட்டத்தின் கீழ் கடனை பெற்றுக் கொள்வதற்கான கடன் விண்ணப்ப படிவம்.</u>**

**<u>(கட்டாய சேமிப்பு வைப்பினை பிணையாக வைத்து கடனை பெற்றுக் கொள்வதற்கு மாத்திரம்).</u>**

01. கடன் விண்ணப்பதாரியின் முழு பெயர் **:-**
    (கணக்கு வைத்திருக்கும் முதல் நபர்)
02. கணக்கு வைத்திருக்கும் இரண்டாவது நபரின் முழு பெயர் **:-**
03. முகவரி **:-**
04. பிறந்த திகதி**:-** வயது: (ஆண்டுகள்) **:-**
06. தொலைபேசி இலக்கம் **:-**
07. கட்டாய சேமிப்பு வைப்புக் கணக்கிலக்கம் **:-**
08. 20...................................திகதியில் வைப்பு மீதி ரூ ..............................
09. விண்ணப்பிக்கும் கடன் தொகை ரூ.................... ..........
10. கடன் தேவை: வருமானம் உழைத்தல் / உயர் கல்வி / தொழிற் பயிற்சி / நுகர்வு/ இடர்
11. வருமானமீட்டும் கருத்திட்டம் எனில் (அது தொடர்பான விபரங்கள்)

| விடயம் | பயன்படுத்தும் தொகை (ரூ) |
|---|---|
| | |
| | |
| | |
| **மொத்தம்** | |

மேற்படி தகவல்கள் உண்மையானதும் மற்றும் சரியானதுமாகும் எனவும், இத்தகவல்கள் பொய்யானது/ பிழையானது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் கடன் தொகையினையும் மற்றும் அத்தினத்தில் செலுத்த வேண்டிய வட்டித் தொகையும் ஒரே தடவையில் செலுத்தி முடிப்பேன் எனவும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் எனது/எங்கள் பெயரில் உள்ள கட்டாய சேமிப்பு கணக்கில் இருந்து எதிரீடு செய்து கொள்வதற்கு இணங்குவதுடன், இக்கடன் திட்டத்துடன் தொடர்புடைய நிபந்தனைகள்/ விதிமுறைகளை ஏற்றுக் கொள்கிறேன் / கொள்கிறோம்.

**கணக்கு வைத்திருக்கும் முதல் நபர்**

பெயர் :-
கையொப்பம் :-
திகதி :-

**கணக்கு வைத்திருக்கும் இரண்டாம் நபர்**

பெயர் :-
கையொப்பம் :-
திகதி :-

.........................................என்பவருக்கு இக்கடன் திட்டத்தின் கீழ் ரூபா............................../= தொகையினை வழங்குவதற்கு சிபாரிசு செய்கிறேன் / செய்யவில்லை

திகதி

கையொப்பம்
வங்கி முகாமையாளர்.

ரூ............................................./= கடன் தொகை அனுமதிக்கப்படுகிறது / அனுமதிக்கப்பட வில்லை.

தலைவர்
வங்கிக் கட்டுப்பாட்டுச் சபை.

# கடன் ஒப்பந்தம்

.....................................................................................எனும் முகவரியில் வசிக்கும்...................................................................
(தே.அ.அ.இல.............................................) மற்றும்..........................................................................எனும் முகவரியில் வசிக்கும்.............................................(தே.அ.அ.இல.........................................................) ஆகிய நான் / நாங்கள் இருவரும்…................ சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் ............. எனும் கணக்கிலக்கத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கட்டாய சேமிப்பு கணக்கில் காணப்படும் மீதியினை பிணையாக வைத்து கீழ்வரும் நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்கி ரூ............................................. (ரூ. ......................................./=) தொகையினை கடனாக பெற்றுக் கொள்கிறேன் / கொள்கிறோம்.

1. தற்போதைய வருடாந்த வட்டி வீதமான ........... .%, அல்லது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் பரிந்துரைக்கப்படும் வட்டி விகிதத்தை செலுத்த கடமைப்பட்டுள்ளேன்/ கடமைப்பட்டுள்ளோம்.

2. ................................. கடன் தொகையின் தவணைகளை ஒவ்வொரு மாதமும் ரூ.................../- வாக ........... தவணைகளிலும் ரூ................................. தொகையினை................................. தவணையிலும் அதற்கான வட்டித் தொகையினையும் திருப்பிச் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் / கடமைப்பட்டுள்ளோம்.

3. கடன் தொகையைப் பெற்றுக்கொண்ட குறித்த காரணத்துக்கு மாத்திரமே பயன்படுத்துவேன் என இணங்கிக் கொள்கிறேன் / கொள்கிறோம்.

4. ஒவ்வொரு மாதமும்......... திகதியின் 04 நாட்களுக்குள், கடன் வட்டித் தொகையினையும் மற்றும் கடன் தவணையினையும் அங்கத்தவர் / திரியமாதா/ அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்பு வைப்பு கணக்கில் வைப்புச் செய்வேன்/ செய்வோம்.

5. கடன் வட்டி மற்றும் கடன் தவணைத் தொகையினை ஒப்புக்கொண்ட திகதியில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் செலுத்த தவறும் பட்சத்தில் அந்தத் திகதியிலிருந்து 90 நாட்களுக்குப் பின்னர் வரும் முதல் நாளில் எனது/ எங்களுடைய பெயரில் உள்ள ............. இலக்க கட்டாய சேமிப்பு வைப்பு கணக்கில் உள்ள வைப்புத் தொகையிலிருந்து செலுத்த வேண்டிய கடன் தொகையினையும் அதற்குரிய அறவிட வேண்டிய வட்டியினையும் மற்றும் அபராத தொகையினையும் ஒரே தடவையில் அறவீடு செய்து கொள்வதற்கு இணங்கி கொள்வதுடன், அதற்கான எந்தவித ஆட்சேபனைகளும் இல்லையென ஒப்புக் கொள்கிறேன் / கொள்கிறோம்

6.சமுர்த்தி வங்கியால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு கீழ்படிவேன் / கீழ்ப்படிவோம்.

**<u>முதலாம் தரத்தினர்</u>**

| பெயர் | கையொப்பம் | தே.அ. அ. இலக்கம் |
|---|---|---|
| 1............................................ | ............................................... | ................................................................ |
| 2............................................ | ............................................... | ................................................................ |

**<u>இரண்டாம் தரத்தினர்</u>**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் :

கையொப்பம் : திகதி:-

**சாட்சியின் கையொப்பம்:-**

1. ........................................................................ தே.அ.அ.இல ......................................................V

2. ........................................................................ தே.அ.அ.இல ......................................................V